# THE MADRAS LEGISLATIVE COUNCIL

**Thursday, the 19th February 1959.**

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. DR. P. V. CHERIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Mineral deposits in Salem district*

* 71 Q.—SRI V. V. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of any proposals before the Government of India to depute a team of Geologists to conduct a survey of mineral deposits in Salem district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Two officers of the Geological Survey of India are at present engaged in systematic mapping and mineral investigations in Salem district.

The southern part of the district has already been surveyed in detail.

This Government are not aware of any proposal before the Government of India to depute a team of Geologists to conduct a survey in Salem.

SRI V. V. RAMASWAMI : யூனியன் உதவி மந்திரி திரு. ராமசாமி கடந்த நவம்பர் 10-ம்தேதி சேலத்திற்குச் சென்றிருந்தபோது 'A team of Geologists will be deputed shortly by the Union' என்று சொல்லியிருக்கிறார். இப்போது நடக்கும் ஸர்வேயில் அதுவும் அடங்கியிருக்கிறதா, அல்லது அதை ஸர்வே செய்வதற்கு வேறு ஜியாலஜிஸ்டுகள் வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவர் என்ன சொன்னார் என்று எனக்குத் தெரியாது.

SRI M. ETHIRAJALU : தென் ஆற்காடு ஜில்லாவில் தாழங்குளம் என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே 16 சதுர மைல் அளவிற்கு இரும்புக் கனி கிடைக்கும் இடம் இருப்பதாக ஒரு மகஜரை, அங்குள்ள மக்கள் மாநிலத் தொழில் அமைச்சரிடம் கொடுத்திருக்கிறார்கள். அதன் நகல் நமது சர்க்காருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே இரும்புக் கனி கிடைக்கிறதா இல்லையா என்று பரிசீலிப்பதற்காக ஜியலாஜிகல் இலாகாவினரை அங்கே அனுப்ப நமது அரசாங்கத்தார் முன்வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மூலக் கேள்வி சேலம் சம்பந்தப்பட்டது. கனம் அங்கத்தினரின் உப-கேள்வி தென்னாற்காட்டைப்பற்றியதாக இருப்பதால், அதைத் தனிக் கேள்வியாகப் போட வேண்டும்.